DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.178/2022 |

| | |
|---|---|
| Deposition of Witness | { PW7 |
| | { Prosecution |
| | { |

| | |
|---|---|
| Name | : K.S.மணி |
| Father's Name | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.09.2023.

2023 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.7 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

1, 2, 3 எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பாய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.07.2020 தேதியன்று இதே நிலையில் பணிபுரிந்த போது அன்று காலை 11 மணிக்கு சங்ககிரி அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவல் கிடைக்கபெற்று நான் அங்கு காலை 11.30 மணிக்கு நேரில் சென்று சிகிச்சையில் இருந்த ரத்தினவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு மதியம் 1.15 மணிக்கு நிலையம் வந்து வழக்கின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.436/2020 ச.பி.294 பி, 323, 342, 307 இ.த.சா-வாக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 8. பின்பு நான் அசலை கணம் நீதிதுறை நடுவர் சங்ககிரி-1 ற்கும் நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பின்பு வழக்கின் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பினை சங்ககிரி வட்ட காவல் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

காவல் நிலையத்திற்கு மருத்துவமனையில் இருந்து தகவல் எவ்வாறு கிடைத்தது என்று அ.சா.ஆ.8ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து தகவல் அனுப்ப தனி படிவம் உள்ளது என்றால் சரிதான். அந்த தகவலை நான் வாங்கவில்லை. அந்த தகவலை பொது நாட்குறிப்பில் குறிக்க வேண்டும் என்றால் சரிதான். எனக்கு மருத்துவமனை தகவலை சொன்னவர் பெயர் நினைவு இல்லை. அன்றைய தினம் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்தவர் பெயர் நினைவு இல்லை. நான் அன்றைய தினம் மருத்துவமனை சென்று புகார் வாக்குமூலம் பெற்று வந்ததற்கான பதிவு உள்ளதா என்றால் உள்ளது. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை நான் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான். பிடிக்க கூடிய குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விபரத்தை பொது நாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். அந்த விபரத்தை அச்சு முதல் தகவல் அறிக்கையில் காலம் 3E-யில் குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான். ஆனால் அ.சா.ஆ.8 அந்த குறிப்பு இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.8 அவசர முதல் தகவல் அறிக்கையாக நீதிமன்றத்திற்கு அனுப்பபடவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகளுக்கு கட்டுப்பட்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வாக்குமூலம் பதிவு செய்யும் போது காயம் அடைந்தவரின் உடையில் இரத்த கறை இருந்ததா என்று பார்த்தேனா என்றால் நினைவு இல்லை.

Sd/- K.S.மணி

Sd/- திரு. ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.